IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
**CC. No.**666/2019

**Cross PW - 1**

Name: **திரு.பாலையா**

S/o : **பாலையா**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.

13.02.2026

2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

இவ்வழக்கின் சாட்சிகளான ஆறுமுகம், ராமலட்சுமி, பொன்முருகன் ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். ஆறுமுகம் எனது மகன் ஆவார். ராமலட்சுமி எனது மகள் பொன்முருகன் எனது பேரன் ஆவார். எனது மகள் ராமலட்சுமியின் கணவர் பெயர் என்னவென்றால் வயோதிகம் காரணமாக தற்போது எனக்கு நியாபகமில்லை. தற்போது நாங்கள் வசித்து வரும் வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் எனது வீட்டில் ஆட்டுக்குட்டிகள் வளர்த்து வந்தோம் என்றால் சரிதான்.

நான் ஆட்டுக்குட்டிகளை மேய்த்தபோது அது என்னை இழுத்துபோட்டதில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஆடடுக்குட்டிகள் கீழே இழுத்துப்போட்டதால் தான் காயம் ஏற்பட்டது என்றாலும் இவ்வழக்கிற்காக எதிரிகள் தாக்கியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகளின் கணவரை விசாரித்தால் இவ்வழக்கு சம்பவம் பற்றி உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். என்னை எதிரிகள் அடித்ததாக கூறப்படும் தேதியிலேயே காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

இதற்கு முன்பு எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
**CC. No.**666/2019

**Cross PW - 2**

Name: **திருமதி. சீதாலட்சுமி**

W/o : பாலையா

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.

13.02.2026

2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**எனது மகள் ராமலட்சுமியின் கணவர் பெயர் கிருஷ்ணமுத்து ஆகும். இவ்வழக்கு சம்பவம் நடந்தபோது எங்கள் வீட்டில் ஆட்டுக்குட்டிகள் வளர்த்து வந்தோம் என்றால் சரிதான். மேற்படி ஆட்டுக்குட்டிகளை எனது கணவர்தான் மேய்ச்சலுக்கு அழைத்து செல்வார் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்திற்கு ஒருவாரம் முன்பு மேற்படி ஆட்டுக்குட்டிகள் எனது கணவரை கீழே இழுத்துபோட்டதில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவருக்கு மேற்படி முறையில் தான் காயம் ஏற்பட்டது என்றாலும் இவ்வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

**நாங்கள் குடியிருக்கும் வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் வீட்டை சுற்றி உள்ளவர்களை விசாரணை செய்தால் எனது மகளுக்கும் மருமகனுக்கும் சண்டை நடந்ததா என்பது தெரியவரும் என்றால் சரிதான். எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும்எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>நீதித்துறை நடுவர் எண்.2,<br>திருவில்லிப்புத்தூர். |

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
**CC. No.**666/2019

**Cross PW - 3**

Name: **திருமதி. ராமலட்சுமி**

W/o : கிருஷ்ணமுத்து

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.

13.02.2026

2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

நானும் எனது அம்மாவும் அப்பாவும் ஒரே வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடந்தபோதும் நாங்கள் ஒரே வீட்டில்தான் இருந்தோம் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பும் தற்போதும் எதிரிகளுக்கும் எங்களுக்கும் எந்தவித பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சியான ஆறுமுகம் என்பவரது வீடும் எதிரிகளின் வீடும் அருகிலுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்தின்போது எனது அம்மாவும் அப்பாவும் ஆடு வளர்த்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் அது மேய்ச்சலுக்கு எங்கும் செல்லாது. மேற்படி ஆடு இழுத்துப்போட்டதில் எனது அப்பாவிற்கு கையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி ஆறுமுகத்திற்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே அவர்கள் வீட்டின் முன்பு உள்ள வாறுகால் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் அதனால் தான் எதிரிகளுக்கும் எங்களுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு எந்தவித பேச்சு வார்த்தையும் இல்லை என்றாலும் சரியல்ல. அதனால் மேற்படி ஆறுமுகத்தின் தூண்டுதலின் பேரில் எனது அப்பா எதிரிகள் மீது பொய்யாக இவ்வழக்கின் புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு ஏற்பட்ட காயத்திற்கும் இவ்வழக்கின் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

எனது கணவரை விசாரித்தால் உண்மையில் எங்களுக்குள் சம்பவத்தன்று சண்டை நடந்ததா என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.